**கவனிக்க** .- *30.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III), *பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1866 - 2014 ජූනි මස 06 වැනි සිකුරාදා - 2014.06.06**

*1866 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 702 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 714 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூன் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## கடுவளை மாநகர சபை

பதவிகள் வெற்றிடம்

மேல் மாகாண அரசாங்க சேவையின் கடுவளை மாநகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாண மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கும் பதவிகள்

| தொடர் இல. | பதவிகள் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சாரதிகள் II "ஆ" வகுப்பு | 10 | ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860<br><br>பீஎல்-3-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>(ii) பிரத்தியேக மோட்டார் வண்டி அல்லது நிகர நிறை 24 அந்தருக்குக் குறைவான ஸ்ரேசன் வெகன் வண்டியை ஓட்டுவது பற்றி வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(iii) சாரதியாக 3 வருடங்கள் சேவையாற்றிய அனுபவமிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)<br><br>(iv) ஆகக் குறைந்த உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும்.<br><br>(v) பகல் மற்றும் இரவு வேளைகளில் சேவையில் ஈடுபடக்கூடிய உடல் ஆரோக்கிய முடையவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் நல்ல கண் பார்வை உடையவராகவுமிருத்தல் வேண்டும்.<br><br>(vi) பெருவீதிகள் சட்டக்கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br><br>(vii) நடாத்தப்படுகின்ற செயன்முறை பரீட்சை மற்றும் வீதிச் சட்ட விதிகள் பரீட்சையில் ஆகக்குறைந்தது 40% புள்ளி பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். |

| தொடர் இல. | பதவிகள் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 2 | தகனசாலை இயக்குநர் தரம் III | 01 | ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860<br><br>பீஎல்-2-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | (i) **உள்ளக விண்ணப்பதாரிகள்-**<br>(அ) ஆகக்குறைந்தது 8 ஆந் தரத்தில்/ 9 ஆம் ஆண்டில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>(ஆ) ஆகக்குறைந்தது 2 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (திணைக் களத்தின் தலைவரினால்/ நிறுவனத் தலைவரினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.<br><br>(ii) **வெளிவாரி விண்ணப்பதாரிகள்-**<br>(அ) தேசிய பொது கல்வி தராதரப் பத்திர பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஏதேனும் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும்<br>(ஆ) ஆகக் குறைந்தது 2 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அரசில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தின் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 3 | தகனசாலை இயக்குநர் உதவியாளர் | 01 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600<br><br>பீஎல்-1-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 4 | துறை ஊழியர் | 01 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600<br>பீஎல்-1-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | ஆகக்குறைந்தது 5 ஆந் தரம்/ஆண்டு 6 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 5 | சுகாதாரத் தொழிலாளிகள் | 20 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600<br>எம்என்-1-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | கல்வி தகைமைகள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. |

(ஆ) தற்போதும் கடுவளை மாநகர சபையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்காக மட்டும் கோரப்படும் பதவிகள்

| தொடர் இல. | பதவிகள் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார நிருவாகத்தர் தரம் III | 1 | ரூபா 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040<br><br>எம்என்-1-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத் திறமைகாண் தடை உண்டு. | (i) **கல்வித் தகைமைகள்** க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாத அமர்வுகளில் மொழி மற்றும் கணிதத்தில் 2 திறமை சித்திகளுடன் 6 பாடங் களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.<br>(ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.) |

| தொடர் இல. | பதவிகள் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (ii) **அனுபவம்**<br>உள்ளூராட்சி நிறுவனத்தில் பீஎல்-1 மற்றும் பீஎல் - 2 சம்பள தொகுதி இலக்கத்தின் கீழ் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள மற்றும் நிரந்தர சேவையில் 5 வருடத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியராகவிருப்பதுடன் சேவைக் காலத்தை நிறுவன தலைவர் எழுத்துமூலம் உறுதிசெய்தல் வேண்டும்.<br><br>(iii) பதவியில் கடமை புரிவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>(iv) **எழுத்துமூல பரீட்சை**.-<br>பொது அறிவு மற்றும் பொது உளச் சார்பு 1 1/2 மணித்தியால பரீட்சைக்கான வினாப்பத்திரம் மற்றும் துறைக் குரிய அறிவை பரீட்சிக்கும் 1 மணித்தியால வினாப்பத்திரத்தைக் கொண்டது. |
| 2 | நூலக உதவியாளர் | 01 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600<br><br>பீஎல்-1-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | (i) **உள்ளக விண்ணப்பதாரிகள்**.-<br>ஏற்கனவே கடுவளை மாநகர சபையில் அலுவலக ஊழியர் சேவையில் நிரந்தரமாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.<br><br>**கல்வித் தகைமைகள்** :<br>க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஆறு பாடங்களில் சித்தி பெற் றிருத்தல்.<br><br>**சேவை அனுபவம்** :<br>(அ) அலுவலக ஊழியர் சேவையில் III வகுப்பு/ தரத்தில் நிரந்தரமாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.<br><br>(ஆ) அலுவலக ஊழியர் சேவையில் III வகுப்பு/தரத்தில் 6 வருட தொடர் சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br><br>(இ) அலுவலக ஊழியர் சேவையில் III வகுப்பு/ தரத்திற்குரிய வினைத்திறமை காண் தடைப் பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br><br>(ஈ) பதவியுயர்வு திகதியன்று முழுமையான 5 வருட சேவை காலத்திற்குள் திருப்தி கரமாக சேவையாற்றியிருத்தல். |
| 3 | அலுவலக அலுவல் உதவியாளர் | 11 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600<br><br>பீஎல்-1-2006ஏ நான்காவது படி நிலைக்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு. | (i) **உள்ளக விண்ணப்பதாரிகள்** :-<br>ஏற்கனவே கடுவளை மாநகர சபையில் அலுவலக ஊழியர் சேவையில் நிரந்தர மாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br><br>**கல்வித் தகைமைகள்** :<br>க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத் தல். |

| தொடர் இல. | பதவிகள் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | **சேவை அனுபவம் :**<br>(அ) அலுவலக ஊழியர் சேவையில் III வகுப்பு/ தர பதவியில் நிரந்தரமாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.<br>(ஆ) அலுவலக ஊழியர் சேவையில் III வகுப்பு/தரத்தில் 6 வருட தொடர் சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(இ) அலுவலக ஊழியர் சேவையில் III வகுப்பு/ தரத்திற்குரிய வினைத்திறமை காண் தடைப் பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(ஈ) பதவியுயர்வு திகதியன்று முழுமையான 5 வருட சேவை காலத்திற்குள் திருப்தி கரமாக சேவையாற்றியிருத்தல். |

**சேர்த்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள்.-**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி மேல் மாகாணத்திற்குள் வதிபவராகவும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முழுமையாக 3 வருடங்களை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது) ;
(iv) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும் ;
(v) மேலே முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பதவிக்குரிய அதற்கு முன்னால் கோரப்பட்டுள்ள தகைமையை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
(vi) ஆட்சேர்த்துக்கொள்ளும் விதிகளுக்கமைய ஒழுங்கமைப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அல்லது செயன்முறை பரீட்சைக்கு தோற்றி அதில் பெற்றுக்கொள்ளும் ஆகக்கூடிய புள்ளிகளுக்கமைய தகைமையுள்ளோர் தெரிவுசெய்யப்படுவர் ;
(vii) விண்ணப்பப்படிவத்தை கோரியதன் பின்னர் அல்லது கோரும் வேளையில் அல்லது இவ்வாட்சேர்த்தலை தாமதப்படுத்தல் அல்லது திருத்தங்கள் செய்தல் இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் அல்லது மாற்றுதல் கடுவளை மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கே உரித்தானதாகும்.

**சேவையில் அமர்த்துவதற்கான நியதிகள்.-**

(i) இப்பணி நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;
(ii) உரியவாறு விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(iii) நியமனம் 3 வருட நன்னடத்தை காலப்பகுதிக்குட்பட்டதாகும் ;
(iv) இவ்வாட்சேர்த்துக்கொள்ளும் ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக, இலங்கை தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரசாங்க திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் மேல்மாகாண சபையின் அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது கடுவளை மாநகர சபையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைந்து ஒழுக கட்டுப்படுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் விதம்.-** இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 8.27"x 11.69" (A4) அளவினதான தாளில் (இல. 11 வரை ஒரு பக்கத்திலும் இல. 12 இலிருந்து மற்றப்பக்கத்திலுமாக) விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பமிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து 2014, யூலை 4 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கடுவளை மாநகர சபை, கடுவளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை சேவையாற்றும் திணைக்கள தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்.) தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தவறான முகவரியை எழுதுவதன் மூலம் திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன் பூர்த்திசெய்யப்படாத மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எவரேனுமொரு விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பாராயின், ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறு விண்ணப்பங்களை தயாரித்து தனித்தனியாக உறையிலிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் நிழற்பட பிரதிகளை இணைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையிற்கு அழைக்கப்படும்போது இச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் அல்லது பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தகைமைகளை குறிப்பிடும் ஏனைய சான்றிதழ்கள் ;
(3) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நன்னடத்தை சான்றிதழ்கள் ;
(5) தேசிய ஆள் அடையாள அட்டையின் இருப்பக்க நிழற்பட பிரதிகள் ;
(6) பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட தனது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட வதிவிட சான்றிதழ்; (இச்சான்றிதழ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் இரண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குள் பெற்றதாக இருத்தல் வேண்டும்.

**வெற்றிடங்களுக்கு தெரிவுசெய்யும் முறை:**

(i) மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு எழுத்துமூல பரீட்சையொன்று அல்லது செயன்முறை பரீட்சையொன்று நடாத்தப்பட தேவைப்படும் பதவிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழுக்கமைய தேவைப்படும் ஆகக்குறைந்த தகைமைகளை பூர்த்திசெய்துள்ளோர் முதலில் உரியவாறு எழுத்துமூல பரீட்சையொன்றிற்கு அல்லது செயன்முறை பரீட்சையொன்றிற்கு ஈடுபடுத்தப்படுவர்;

(ii) எழுத்துமூல பரீட்சையொன்றில் அல்லது செயன்முறை பரீட்சையொன்றில் ஆகக்கூடிய புள்ளிகளை பெற்றுள்ளோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் அங்கு விண்ணப்பப்படிவத்தில் இணைத்துள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் பரீட்சிக்கப்படும். நேர்முகப்பரீட்சையில் தகைமைகளை பூர்த்திசெய்துள்ளோர்களுக்கிடையிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்;

(iii) எழுத்துமூல பரீட்சையில் அல்லது செயன்முறை பரீட்சையில் தோற்றுவதற்கு தேவையற்ற பதவிகளுக்காக விண்ணப்பப்படிவத்தில் இணைத்துள்ள சான்றிதழிற்கமைய தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளோர் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதுடன் அங்கு விண்ணப்பப்படிவத்தில் இணைத்துள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் பரீட்சிக்கப்படும். நேர்முகப்பரீட்சையில் தகைமைகளை பூர்த்திசெய்துள்ளோர்களுக்கிடையிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்;

(iv) எவரேனும் விண்ணப்பதாரிகள் இருவர் அல்லது அதற்குமேல் சமமான புள்ளிகள் பெற்றிருக்கும்போது அவர்களுக்கிடையில் யாரை ஆட்சேர்த்துக்கொள்வது என்பது கடுவளை மாநகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அமையும் ;

(v) எவரேனும் விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டதும் அல்லது எழுத்துமூலப் பரீட்சைக்கு அல்லது செயன்முறை பரீட்சைக்கு தோற்ற அழைக்கப்பட்டதும் அவ்விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளை கொண்டுள்ளனர் எனக் கருதக்கூடாது ;

(vi) இவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக மாநகர ஆணையாளரின் அல்லது வேறொருவரின் உதவியை நாடுவது விண்ணப்பதாரியின் தகைமையை இழக்கச் செய்யும் ;

(vii) இவ்வாட்சேர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய இறுதித் தீர்மானம் கடுவளை ஆணையாளருக்கே உரித்தானதாகும்.

காமினி குணசேக்கர,
மாநகர ஆணையாளர்,
கடுவளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2014, மே 16.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் கடுவளை மாநகர சபையில் . . . . . . . . . . . . . பதவி**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தரமாக வசிக்கும்
மாவட்டம் :----. பிரதேச செயலாளர் பிரிவு :----.
கிராம அலுவலரின் பிரிவு இலக்கம் :----. பெயர் :-----.
3. நிரந்தர விலசாம் :----.
4. தேசிய அடையாள அட்டை :----.
5. பால் (ஆண்/பெண்) :----. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
6. பிறந்த திகதி :----.
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
7. விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது :
வருடங்கள் :----, மாதங்கள் : ----, நாட்கள் :----.
8. மேல் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிக்கும் காலம் :
வருடங்கள் :----, மாதங்கள் : ----, நாட்கள் :----.
9. இலங்கை பிரசையா இல்லையா என்பது :----.
10. கல்வித்தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்) :-
(1) சித்தியடைந்த ஆண்டு/தரம் :----. வருடம் :----.
(2) க. பொ. த. (சா. த.) பரீட்சை :-
முதலாவது தடவை சுட்டிலக்கம் :----. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :----.
இரண்டாவது தடவை சுட்டிலக்கம் :----. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :----.
சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடம் | சித்தி | ஆண்டு | பாடம் | சித்தி | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

(3) க. பொ. த. (உ. த.) பரீட்சை :-
சுட்டிலக்கம் --------- பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் --------------
சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடம் | சித்தி |
|---|---|
| | |

11.தொழிற்றகைமைகள் (சான்றிதழுடன் உறுதிப்படுத்த வேண்டும்.) :----.

12. சேவை அனுபவம் :-----.

(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :----.
(iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(iv) இதற்கு முன்னர் சேவையாற்றிய இடம் மற்றும் வகித்த பதவி :----.

13. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :----.

14. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள்

பொய்யென நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவராயின், நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .................................... தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

---------------------,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :----.

6-01

---

**பாத்ததும்பற பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவையின் பாத்ததும்பற பிரதேச சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

பாத்ததும்பற பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கமைய உரிய தகைமைகளைக் கொண்ட பாத்ததும்பற பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டவரிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வாகன ஓட்டுநர் தரம் III | 3 | 06/2006 (IV- P.L.3 2006A ரூபா 12,740 -10×130 -10×145- 10×160 - 12 ×170 - ரூபா18,860 | இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (விருப்புக்குரிய பாடங்கள் தவிர) மற்றும்,<br><br>மோட்டார் வாகனம் செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளர் வழங்கிய தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் (மோட்டார் கோச்) கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் அல்லது<br>C - லொறி<br>C1 - பல்கரும வாகனம்<br>D - பஸ்<br>D1 - வான்<br>G - திராக்டர்<br>ஓட்டுவதற்கான தேர்ச்சி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் மற்றும் திராக்டர் ஓட்டுவதில் அனுபவச் சான்றிதழ் பெற்றிருப்போர் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | மற்றும், ஓட்டுநர் அனுதிப்பத்திரம் பெற்ற பின்னர் குறைந்தது 3 வருடகால அனுபவம் பெற்றிருத்தல். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்). மற்றும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல், இரவு வேளைகளில் சேவையில் ஈடுபவதற்குரிய சிறந்த கண்பார்வையும் தேவையான அளவு உடல் மற்றும் உளத் தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும். மற்றும், ஆகக்குறைந்த உயரம் 5 அடி 2 1/2 அங்குலமாக இருத்தல் வேண்டும். |
| 2 | நீர் விநியோகத் தொழிலாளர்கள் தரம் - III | 2 | P. L 1-2006A ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145 - 12×160 - ரூபா 17,600 | இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா. த.) இரண்டு திறமைச் சித்திகளுடன் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்படக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (விருப்புக்குரிய பாடங்கள் தவிர). |
| 3 | அலுவலக வேலை உதவியாளர் தரம் - III | 1 | P. L 1-2006A ரூபா 11,730 -10×120 -10×130 - 10×145 - 12×160 - ரூபா 17,600 | இரு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா. த.) இரண்டு திறமைச் சித்திகளுடன், சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்படக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (விருப்புக்குரிய பாடங்கள் தவிர). |

2. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்.-**

(1) விண்ணப்பதாரிகள் வம்சாவழியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னரான 3 வருட காலம் பாத்ததும்பற பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.)

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) மேற்காட்டிய ஒவ்வொரு பதவிக்கும் உரிய ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆட்சேர்ப்பு முறைகளுக்கமைய முறையான நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுப் பெற்றுக்கொண்ட உயர்மட்டப் புள்ளிகளின் அடிப்படையில் தகுதியானோர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(6) வாகன ஓட்டுநர் பதவிக்கென உடல், உளத் தகைமை மற்றும் கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் பொதுத் தகைமைகளைப் பரிசோதிப்பதற்கென நேர்முகப் பரீட்சையுடன், கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையின்போது பெற்றுக்கொண்ட பெறுபேறுகளுடன், மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பரிசோதகரால் நடத்தப்படும் செயன்முறைப் பரீட்சையிலும் சித்தி பெறுதல் வேண்டும்.

(7) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பைத் திருத்தும், இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரங்களும் பாத்ததும்பற பிரதேச சபைக்கும் அதன் செயலாளருக்கும் உண்டு.

(8) ஏற்கனவே மாகாண அரச சேவையின் கீழ் பாத்ததும்பற பிரதேச சபையில் நிரந்தர சேவையில் பணியாற்றும் பணியாட்கள் நிறுவனத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(9) பாத்ததும்பற பிரதேச சபையில் தற்போது சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய மற்றும் பணியாற்றும் ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளோர் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

3. **ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்.-**

(1) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் கொண்டவை.

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உரிய வகையில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(3) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருட கால தகுதிகாண் சேவைக்கு உட்படுவர். ஏற்கனவே அரச, மாகாண அரச சேவையில் பதவி நிரந்தரமாக்கப்பட்டவர்கள் 1 வருட காலம் பதில் கடமைக் காலத்துக்கு உட்படுத்தப்பட்டுச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(4) அரசாங்க மொழிகள் கொள்கைகளைச் செயற்பத்துவதற்கென விசேடமாக அரசகரும மொழிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கெனத் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ள ஏற்பாடுகளுக்கும் இணங்கச் செயற்படுதல் வேண்டும்.

(5) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், மத்திய மாகாண சபையின் நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது பாத்ததும்பற பிரதேச சபை ஆகியவை காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

(6) விண்ணப்பதாரிகள் அனைவரும் சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாத காலத்துக்குள் அரசாங்க மருத்துவர் ஒருவரால் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனையின்போது உடற்தகைமை பொருத்தமற்றது எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

(7) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டவராக இருத்தல் கூடாது.

(8) அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.

4. **விண்ணப்பிக்கவேண்டிய முறை.-** இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கமைய 8.27" × 11.69" (A4) அளவுத் தாளில் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2014.06.20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், பாத்ததும்பற பிரதேச சபை, பிட்டியேகெதர, வத்தேகம" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். தபாலில் காணாமற்போகும் அல்லது பிழையாக முகவரியிடப்பட்டுத் திருப்பியனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்படமாட்டாது. உரிய காலத்துக்குள் கிடைக்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பிவைத்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(3) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(4) தமது நிரந்தர வதிவிடத்துக்குரிய கிராம அலுவலர் வழங்கிப் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய வதிவிடச் சான்றிதழ் ;

(5) தொழிற் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;

(6) சேவை அனுபவச் சான்றிதழ்கள் ;

(7) அண்மையில் பெறப்பட்ட ஒரு குணநலச் சான்றிதழ்.

செயலாளர்,
பாத்ததும்பற பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பற,
2014, மே 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

**பாத்ததும்பற பிரதேச சபை**

................................ பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. பிறந்த திகதி:
   வருடம் :---- மாதம் :---- திகதி :----.
4. விண்ணப்ப இறுதித் திகதியில் உள்ளவாறான வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. குடியியல் நிலைமை : விவாகமானவர்/தனித்தவர் :----.
6. தேசிய இனம் :----.

7. நீர் இலங்கைப் பிரசையா ? :----.
அவ்வாறாயின் பிறப்பினாலா அல்லது பதிவினாலா ? :----.

8. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.)
சித்தியடைந்த வருடம் :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. 1. ஏனைய தகைமைகள் :----.
2. தொழிற் தகைமைகள் :----.
3. சேவை அனுபவம் :----.
4. கல்வித் தகைமைகளதும் ஏனைய தகைமைகளதும் சான்றிதழ்களை உறுதிப்படுத்துவதற்கனெ அவற்றின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் :----.

10. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? :----.

இந்த விண்ணபப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னறாயின் நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னராயின், நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரது உறுதியுரை**

(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ......................................... தற்போது இங்கு ................... ஆக நிரந்தர/சமயோசித/பதிலீட்டு/ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்றார். அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

6-62

## ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

பதவி வெற்றிடங்கள்

வடமேல் மாகாண மாகாண அரச சேவையில் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ள உரிய தகுதிகளுடைய ஆரச்சிகட்டுவ பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| 1 | பதவிப் பெயர் | வெற்றிட தொகை | சம்பள அளவுத்திட்டம் | கல்வியும் வேறு தகைமைகளும் |
|---|---|---|---|---|
| | சாலைப் பணியாளர்கள் (தரம் III ) | 4 | அ. நி. சு. 06/2006 iv பி.எல். 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி. |
| | நீர்ப்பாசன ஊழியர் (தரம் III ) | 1 | அ. நி. சு. 06/2006 iv பி.எல். 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி. |
| | சுகாதார ஊழியர் (தரம் III ) | 2 | அ. நி. சு. 06/2006 iv பி.எல். 1 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாட சாலையொன்றில் 8 ஆம் தரத்தில் சித்தி (9 ஆம் ஆண்டு) |

**2. பொதுத் தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) நற்பண்புகளை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று 18 வயதிற்கு குறைவில்லாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் உள்ளோரை இந்த வயதெல்லை கட்டுப்படுத்தாது) ;
(4) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்றுக்கு முன்பிருந்து தொடர்ச்சியாக மூன்று (03) வருடகாலத்திற்கு குறைவில்லாமல் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசமொன்றில் நிரந்தரமாக வசித்தவராகவும் இருத்தல் வேண்டும். (இதனை வாக்காளர் பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்) ;
(5) தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டனை விதிக்கப்படாதவராயிருத்தல் வேண்டும் ;
(6) தற்போது ஆரச்சிகட்டுவ பிரதேச சபையில் பணிபுரிபவராயின் விசேட சலுகை அளிக்கப்படும் ;
(7) விண்ணப்பம் கோரப்படும் பதவிகளுக்குரிய அவசியமான கல்வித்தகைமை கட்டாயம் இருத்தல் வேண்டும்;
(8) சுகாதார ஊழியர்களுக்காக விண்ணபிப்போர் புத்தளம் மாவட்டத்திற்குள் வசிப்போராக இருத்தல் வேண்டும்.

**3. பதவி நியமன முறை.-** (1) நேர்காண் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமை, வாய்மொழித் தேர்வு பெறுபேறுகளின் அடிப்படையில் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**4. பதவிக்கு சேர்க்கும் நிபந்தனைகள்.-**

(1) இப்பணி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குட்பட்டது. நடைமுறையிலுள்ள விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டும் ;
(2) இந்நியமனம் மூன்று வருடகால தகுதிகாண் காலத்துக்குட்பட்டதாகும் ;
(3) மேற்கண்ட ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை, நிதிமுறை, வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட நிபந்தனைகளுக்கும் விதிமுறைகளுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட/சட்டங்களின் விதிமுறைகளுக்கும், ஆரச்சிகட்டுவ பிரதேச சபை காலத்துக்கு காலம் வெளியிடும் உத்தரவுகளுக்கும் ஏற்ப பதவியில் அமர்த்தப்பட்டவர் கடமை புரிய இணங்க வேண்டும்.

05. **விண்ணப்பிக்க வேண்டிய முறை-** இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்ப படிவத்துக்கேற்ப A4 அளவிலான காகிதத்தில் இரு பக்கத்தையும் பாவித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 2014.06.20 ஆந் திகதிக்கு முன்பதாக "செயலாளர், ஆரச்சிகட்டுவ பிரதேச சபை, ஆரச்சிகட்டுவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும் உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவி பற்றி குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் :

பிறப்புச் சான்றிதழ் ;
கல்விச் சான்றிதழ் ;
பாடசாலை விடுகைப் பத்திரம் ;
வதிவிடத்தை உறுதி செய்யும் கிராம அலுவலரது சான்றிதழ் (பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்) ;
அண்மையில் பெற்றுக்கொண்ட 2 குணநல சான்றிதழ்கள் ;
தொழில் அனுபவ சான்றிதழ்.

தற்போது அரச/மாகாண அரச சேவைகளில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட தினத்துக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னரோ அல்லது கோரப்படுவதற்கு இடையிலோ இந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தும் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளும் பூரண அதிகாரம் ஆரச்சிகட்டுவ பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

கே. பீ. சந்தனகுமார,
செயலாளர்,
ஆரச்சிகட்டுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆரச்சிகட்டுவ.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண அரச சேவையில் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள**

........................................................................ பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2014

1. (1) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
   (2) முதலெழுத்துடன் பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் :----.
5. பிறந்த திகதி :-
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
6. விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தில் வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் : ----, நாட்கள் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
9. ஆரச்சிகட்டுவ பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் காலம் : வருடங்கள் :----.
10. இலங்கை பிரசை வம்சாவளியாகவா? அல்லது பதிவின் மூலமா? :----.
   கல்வித்தகைமை
   பரீட்சையின் பெயர் :----. வருடம் :----.

| தொடர் இல. | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

11. வேறு தகைமைகள் :----.
12. தொழில் திறமை :----.
13. சேவை அனுபவம் :----.
    1. தற்போது சேவை புரியும் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
    2. தற்போது வகிக்கும் பதவி நிலையும் தரமும் :----.
    3. அப்பதவி நிலைக்கும்/தரத்துக்கும் நியமிக்கப்பட்ட திகதி :----.
    4. இதற்கு முன்னர் சேவை புரிந்த நிறுவனமும் வகித்த பொறுப்பும் :----.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதெனவும் பிரகடனப்படுத்துகிறேன். ஆட்சேர்ப்பு நிபந்தனைகளின் அடிப்படையில் நான் உண்மைக்கு மாறான தகவல்கள் எதனையும் தெரிவித்திருப்பின் என்னை சேவைக்கு சேர்ப்பதற்கு முன்பதாகவோ அல்லது அதற்கு பின்னரோ அது தெரியவரின் எவ்வித நஷ்டஈடுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு நான் ஆளாவேன் என்பதை அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் சம்பந்தமாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி.................................... தற்போது இந்த திணைக்களத்தில் .................................... பணிபுரிகிறார். அவர் அளித்துள்ள மேற்கண்ட தகவல்கள் உண்மையானவை என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படமுடியும்/விடுவிக்கப்படமுடியாது என்பதையும் அவர் எவ்விதமான ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்பட்டவரல்ல என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் அவரின் விண்ணப்பத்தை சிபார்சு செய்துள்ளேன் /சிபார்சு செய்யவில்லை.

---------------------,
திணைக்கள/நிறுவனத் தலைவர் அல்லது
அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
(திணைக்களம்/நிறுவன உத்தியோக முத்திரையை இடவும்)
திகதி :----.

6-88

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ஹற்றன் - டிக்கோயா நகர சபை**

அறிவித்தல்

ஹற்றன் - டிக்கோயா நகர சபையின் 2014.03.20 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் இல. 02 : 02 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஹற்றன் -டிக்கோயா நகர சபைக்கு சொந்தமான திம்புள்ள மூன்றாம் ஒழுங்கை நர்சிங்ஹோம் வீதியில் அமைக்கப் பட்டுள்ள பூங்கா "அழகமுத்து இளைப்பாறும் பூங்கா" "Allagamuthu Recreation Park" என பெயரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

இக்காணியானது உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எல். டீ. வை. விஜேவர்தன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1998, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதியும் இலக்கம் 8555 மற்றும் LRC இலக்கம் 833 கொண்டதுமான வரைபடத்தின் லொட் இல. 1 ஆகும். இதன் விஸ்தீரணம் 1 றூட் 1.01 பேர்ச்சஸ் கொண்டதுடன் அதன் எல்லைகள் வருமாறு :

1. வடக்கு : லொட் இல. 01 பி. பி. மஹ. 718 மற்றும் திம்புள்ள 3 ஆம் ஒழுங்கை ;
2. கிழக்கு : திம்புள்ள மூன்றாம் ஒழுங்கை மற்றும் ஹற்றன் தோட்டம் ;
3. தெற்கு : ஹற்றன் தோட்டம் மற்றும் நீர் ஓடை ;
4. மேற்கு : நீர் ஓடை மற்றும் லொட் இலக்கம் 01 பி. பி. மஹ. 718.

வைத்தியர் அழகமுத்து நந்தகுமார்,
தலைவர்,
ஹற்றன் டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹற்றன்-டிக்கோயா,
2014, மே 13.

6-03

### பதுளை மாநகர சபை

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் நியதிகளின் படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையைப் பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகர சபைக்கு உரிமையாக்குவதற்கு 2014.04.01 ஆந் திகதிய சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.*

*பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையாளர்களாக உரிமை கோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பை சாட்சிகளுடன் எழுத்து மூலமாக மாநகர சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சொல்லப்பட்ட கால எல்லைக்குள் இவ்வறிவித்தலின் படி செயல்படாவிடின் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக் கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதன் படிகீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகர சபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*உபாலி நிஸ்ஸங்க குணசேகர,*
*மாநகரபிதா,*
*பதுளை.*

*மாநகர சபை,*
*பதுளை.*
*2014, மே 12.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவுறும் இடம் | இடதுபக்க வரிப்பண இலக்கம் | வலதுபக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மெதபத்தன கல்வல பாதை | மெதபத்தன சுற்றுவட்டப் பாதை | கல்வல | 87/2, 87/3, 87/5 | 87/14, 87/16, 87/8, 87/10, 87/8A | 250 | 4.5 |

*6-04*

---

### ஆணமடுவ பிரதேச சபை

வீதிகள் பற்றிய அறிவித்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 21, 22 மற்றும் 23 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணமடுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளதும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மற்றும் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் பாதைகள் தவிர்ந்த அனைத்துப் பாதைகளும் ஆணமடுவ பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் எனக் கருதப்பட்டுள்ளதாகவும்,*

*அச்சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் பிரகாரம் வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், ஆணமடுவ பிரதேச செயலாளர் பிரிவு அதிகார எல்லைக்குள் வருவதும் ஆணமடுவ பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டு, வரையப்பட்டு இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைகளை ஆணமடுவ பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுப்பாதைகள் எனப் பிரகடனப்படுத்துவதற்கெதிரான ஆட்சேபனைகளை பெறும் நோக்கத்துடன் ஆணமடுவ பிரதேச சபைத் தலைவர் எச். எம். உதார மதுஷங்க ஆகிய என்னால் 2014.01.10 ஆந் திகதிய 1845 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை பகுதி IV (ஆ) உள்ளூராட்சிப் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலுக்கு எதிராக எவ்வித ஆட்சேபனைகளும் முன்வைக்கப்படாததாலும், ஆட்சேபனைகளை முன்வைப்பதற்காக பிரகடனப்படுத்தப்பட்ட கால அவகாசம் 2014.04.10 ஆந் திகதியுடன் முடிவடைவதாலும், அந்த 1845 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட நாள் முதல்*

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட பாதைகள் ஆணமடுவ பிரதேச சபையின் பொதுப் பாதைகள் எனவும், அப்பாதையின் மத்தியிலிருந்து இரு மருங்குகளிலும் கட்டிடக் கோடு 25 அடியாக இருக்கும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

எச். எம். உதார மதுசங்க ,
தலைவர்,
ஆணமடுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆணமடுவ,
2014, மே 13.

**அட்டவணை**

| இல. | பாதையின் பெயர் | தொடங்கும் இடம் | முடியும் இடம் | தூரம் மீற்றர் |
|---|---|---|---|---|
| 1 | ரணவிரு மகிந்த மாவத்தை | புத்தளம் - குருநாகல் வீதியிலிருந்து | சிலாபம் வீதி வரை | 630 |
| 2 | தர்ஷனகம மாவத்தை | வாடிவீட்டிலிருந்து | கம் உதாவ வீதி வரை | 502 |
| 3 | வெந்தேசி வத்தை வீதி | சிலாபம் வீதியிலிருந்து | தட்டேவ வீதி வரை | 466 |

6-103

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
***(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)***

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

***தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்***

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2014 |
| | | வெள்ளி | 13.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2014 |
| | | வெள்ளி | 20.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2014 |
| | | வெள்ளி | 27.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2014 |
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2014 |
| | | வெள்ளி | 08.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2014 |
| | | வெள்ளி | 15.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2014 |
| | | வெள்ளி | 22.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2014 |
| | | வெள்ளி | 29.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2014 |

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.